சிறைச்சாலையின் கிளைப் பிரிவு—எப்படி உயர்நீதிமன்றத்தின் கிளைப் பிரிவை மதுரையில் அமைக்கப் போகிறோமோ அதுமாதிரி கிளைப் பிரிவை — அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சி காலத்தில்தான் நீதிமன்றங்களை எல்லாம் மாவட்டந்தோறும் பிரித்து வருகிறார்கள். அதுபோன்று புதிதாக ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்களுக்கு மத்திய சிறைச்சாலைகளை மாவட்டந்தோறும் அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்துரு ஏதும் அரசிடத்திலே தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 203, திரு. வி. கே. லட்சுமணன். இருக்கையில் இல்லை. திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

203—

புலியகுளத்தில் கல்யாண மண்டபம் கட்டுதல்.

*23402—திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புலியகுளம் போலீஸ் பாய்ஸ் கிளப்பிற்கு அருகில் உள்ள காலி நிலத்தை கல்யாண மண்டபம் கட்டுவதற்காக வருவாய்த்துறை கோவை மாநகராட்சியிடம் எப்பொழுது ஒப்படைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த வினா அனுமதிக்கப்பட்ட நாள் 24-12-1993. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்றபோது 20-3-1995-ல் இந்த கேள்விக்கு தேவையான பதிலை அறிவித்திருக்கிறார்கள்.

அந்த பதிலை மாண்புமிகு உறுப்பினர் படித்துக் கொண்டு அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையைகூட, புரட்சித் தலைவி, தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் அவர்கள், கோரிக்கையை ஏற்று ஆளும் கட்சி தொகுதி எதிர்கட்சித் தொகுதி என்று பார்க்காமல்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் வேறு எதுவும் வேண்டாம்.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்ட உடனேயே கோரிக்கையை நிறைவேற்றித் தந்து அதை ஆளுநர் உரையிலே அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக அந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினரும் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார். புலியகுளம், போலீஸ் பாய்ஸ் கிளப்பை சார்ந்த நிலம் என்பதால், அதிலே திருமண மண்டபம் கட்டுவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அது எப்போது நிறைவேற்றப்படும் என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே கேட்கப்பட வேண்டியது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாத்திரம் புரட்சித் தலைவி மட்டும் அல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கு முதலமைச்சர். அதனால் தமிழ்நாட்டு மக்களுடைய தேவைகள் எதுவாக இருந்தாலும் அவர்கள் சிபாரிசு செய்வதற்கு கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் நடைபெற்றிருக்கின்றன. அடுத்தபடியாக, நேற்று நான் பேசுகிறபோது எந்த நிலமும் யாருக்கும் சொந்தமில்லை, அது அரசுக்கு சொந்தமானது. அதை நிர்வகிப்பது நில நிர்வாகத் துறை என்று சொல்லியிருக்கிறேன். அந்த நிலம் யாருக்கும் சொந்தமில்லை: விரைவிலே அந்த திருமண மண்டபம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அங்கு இருக்கிற மாநகராட்சி நிர்வாகிகள் எடுத்து நடைமுறைப்படுத்துவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 204, திரு. பாப்பா சுந்தரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.